*2020 செப்டம்பர் 16*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*
*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*
*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*
*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.*

*பிற்பகல் 4–10*

## 14. கலைவாணர் அரங்கத்தில் பேரவைக் கூட்டம் நடைபெற சிறப்பான ஏற்பாடுகளைச் செய்தமைக்கு பேரவைத் தலைவர் நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் பேரவைக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றுள்ளது. அரசிடமிருந்து பேரவைக் கூட்டத் தொடர் அறிவிப்பிற்கான கோப்பு வருவதற்கு ஒன்றிரண்டு நாட்களுக்கு முன்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எந்த இடத்தில் பேரவைக் கூட்டத்தை நடத்தலாம் என்பது குறித்து விவாதித்து, கலைவாணர் அரங்கத்தில் நடத்தலாம் என முடிவு செய்து, அறிவித்த நாளிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்தார்கள்.*

*தலைமைச் செயலகத்தில் உள்ள பேரவை மண்டபம் போன்றே இங்கேயும் அந்த உணர்வோடு மாண்புமிகு உறுப்பினர்கள் அமர்ந்து பங்குகொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டதோடு, கொரோனா நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை 100 சதவிகிதம் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்தார்கள்.*

*கொரோனா* test *செய்து,* negative result*–ஐக் காண்பித்து, இந்த மண்டபத்தில் நுழைவதற்குண்டான அனுமதி அட்டையை ஒவ்வோர் உறுப்பினரும் அணிந்திருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, முதலமைச்சரும் அந்நடைமுறையை கடைப்பிடித்ததற்கு என்னுடைய பாராட்டுகள்.*

அந்த வகையில், மிகச் சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து, சீரிய முறையில் பேரவைக் கூட்டம் நடைபெற நடவடிக்கை எடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஒத்துழைப்பு நல்கிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், சுகாதாரத் துறை அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், அரசு தலைமைக் கொறடா, எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர், IUML உறுப்பினர் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைக் கூட்டம் இங்கே நடைபெற தலைமைச் செயலாளர் தனிக் கவனம் செலுத்தி சிறப்புற பணியாற்றியிருக்கிறார்கள். அதேபோல, மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் மற்றும் பொதுப் பணித் துறை அதிகாரிகள்,பொறியாளர்கள் அனைவரும் சிறப்பாகச் செயல்பட்டார்கள். பேரவைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் குறைவான எண்ணிக்கையிலே அனுமதிக்கப்பட்டிருப்பினும், ஒருங்கிணைந்து செயல்பட்டு சிறப்பாகச் செயல்பட்டுள்ளார்கள். பத்திரிகையாளர்கள், ஊடக நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 12. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

## (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.